உ
கணபதியே துணை
வேலுமயிலுந் துணை.

# வீரவாகுதேவர் பதிகம்.

இஃது
துவை கைக்கோளரென்னும் செங்குந்தர்மரபினராகிய
ஓர் வித்வானால் இயற்றியதை
திருசிரபுரம் ஜில்லா
தவத்துறை வித்வான் மகா ா-ா-ஸ்ரீ
த. சு. அப்பாவுபிள்ளை அவர்களால்
பரிசோதிக்கப்பட்டு
ஷெடி செங்குந்தமுதலிமாரனைவருங்கேட்டுக்கொண்டபடி



திருவையாற்றைச்சேர்ந்த புனல்வாசல்
வித்வான் மகா ா-ா-ஸ்ரீ குழந்தைவேலையர்
மருகனும்
எலையூர்
சுந்தர ஐயர் குமாரனுமாகிய
பஞ்சநத ஐயரால்
திருவாதி
...ர் விலாஸ அச்சுக்கூடத்தில்
...டப்பட்டது.
...920. அணா 1.
... Copyright.

23 SEP 192
931
ழ2998 : 417
M20
122678

உ

கணபதியேநம:

வேலுமயிலுந்துணை.

# வீரவாகுதேவர் பதிகம்.

23 SEP 1

இஃது

புதுவை கைக்கோளரென்னும் செங்குந்தர்மரபினராகிய

ஓர் வித்வானால் இயற்றியதை

திருசிரபுரம் ஜில்லா

தவத்துறை வித்வான் மகா ள-ள-ஸ்ரீ

**த. சு. அப்பாவுபிள்ளை அவர்களால்**

பரிசோதிக்கப்பட்டு

ஷை செங்குந்தமுதலிமாரனைவருங்கேட்டுக்கொண்டபடி



திருவையாற்றைச்சேர்ந்த

புனல்வாசல்

வித்வான் மகா ள-ள-ஸ்ரீ குழந்தைவேலையர்

மருகனும்

எலையூர்

சுந்தர ஐயர் குமாரனுமாகிய

பஞ்சநத ஐயரால்

திருவாதி

அழகர் விலாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

இதன் விலை 1920. அணு 1.

Registered Copyright.

## சாத்துகவி.

மதுரை தமிழ்ச்சங்கத்தின் பரீக்ஷையில் தேர்ந்தவராகிய திரிசிரபுரத்தைச்சேர்ந்த லால்குடியென்னும் தவத்துறை வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ த. சு. அப்பாவு பிள்ளை அவர்கள் இயற்றியது.

### விருத்தம்.

சீர்கொண்ட பொங்கர்சூ ழுலகினிற் றேவர்புகழ்
    சென்னிநாட்டிற் சென்னியாய்த்
திகழ்திருப் பழுவூரில் வாழ்பரம சிவகுகன்
    றிருவடியை மறவாதவ
ரேர்கொண்ட செங்குந்த ரியாவரும் போற்றிடு
    மெழில்வீர வாகுதேவ
ரினியநற் பதிகமது புதுவைவாழ் கவிஞனு
    லியற்றியது பார்த்தெடுத்து
நார்கொண்ட செங்குந்த முதலிமா ரதனையே
    நாடெங்கு மேவிடுத்து
நாட்டுதற் கெண்ணியே யச்சிலிட நண்ணியே
    நவின்றபொரு டானளிக்கக்
கார்கொண்ட புனல்வாசல் வாழ்வீர சைவகுல
    கனமுறுஞ் சுந்தரய்யர்
காதலன் பஞ்சநத வய்யாச் சேற்றியே
    கருதுபுகழ் கொண்டனனரோ.

உ

வேலுமயிலுந்துணை.

# வீரவாகுதேவர் பதிகம்.

## விருத்தம்.

திருமருவு நவரத்ன மணிமாலை மகுட
முடி தீபவொளி திகழ்கின்றதாய்ச் செவியிலகு
கவசகுழை யுரகமணி திகழ்வதாய்த் திருநுத
வில் வெண்விபூதி, கருணைவிழி பொழிவதாய்
மீசைமயிர் மேனுதடு காத்திரத் தூண்டமுறுவல்
கனிவுமிகு வருடிகழ மேருவொளி போலவே
காண்கின்ற குருநாதனைத், தருணமிது கரு
ணைபுரி சண்முகக் குறவற்கு தம்பியாய் நின்ற
தகையோய் சரணகமலத்தடிமை மிடிதீர நோக்
குவாய் தடையற்ற கொடையாளனே, விருது
டைய செங்குந்தர் பூதபரி கெஜவிரத விருது
கொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழ
திபராக்கிரம வீரவாகுத் தேவரே. (1)

கோரமிகு வசுரர்மூ வாயிரவ ரொடுதரும்
கோபனை வதைத்தவீரர் கொடுமைமிகு சூரபத்
மன்குமா ரனுமிரவி கோபனை வதைத்தவீரர்,
தாரமிகு சிங்கமுக மாயிர மீராயிரந் தாஷ்டீக
முடையகரமுந் தறுகணர்கள் புடைசூழ வரு
ன்ற வசுரருயிர் சண்முகக் கடவுளமாற்;
சோரனை வதைக்கின்ற மாதீர வீரநின் றொல்
புகழ்த் துதிகவிஞராற் சொல்வதற் கெளியதோ
மாணிக்க தீபமே சுடரனைய வாட்கரபரா, வீர
மிகு செங்குந்தர் பூதபரி கெஜவிரத விருது
கொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூ
ழதி பராக்கிரம வீரவாகுத் தேவரே. (௨)

சடைமீது கங்கைபிறை யிரவிவெண் டலை யோடு தழைதும்பை கொன்றைமாலை தபன னென வொளிர்கின்ற நுதலின்விழி மேனோக்கி சஷ்டிமுக மாய்விளங்கிச், சுடரனைய பொறி யாறு முதயமாய்ச் சோதியழல் தூக்கியே சரவணையினீர் சுடுகொதிப் பேறவே யறுகுழவி யாய்வரத் தூயகார்த் திகையறுவராற், புடைமருவு மடிமீதி லேறிமுத் தந்தந்து பொற்கலச கொங்கைபொங்கப் பூரிக்க வமுதுண்ட முருகவே ளனுஜனே புன்மிடி தொலைத்தருளுவாய், விடையுடைய கொடியாளர் பூதபரிகெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவாகுத் தேவரே. (3)

புண்ணிய மிகுந்தவத் துறைசுரர் புடைசூழ பொதியமலை முனிவர்சூழப் பொற்புமிகு வெண்மருப் புடையவயி ராவதம் பூரிக்க முளரின்மலர்மேற், கண்டெடுத் திடுதெய்வ யானையின் வனைப்பினைக் கண்டவர்க டான்மகிழவே கற்புமிகு வடமீன் றுதிக்கப் பரங்குவடு கலியாண கோலமாகி, எண்டிக்கு பவனிவர பிணிமுகந் தனையூரு மெஃகமுடை யாளனுஜனே எஜுர்வேத முதலாய நான்குமன னஞ்செய்ய வேழையேற் கருள்புரிகுவாய், விண்ணுலகு மண்ணுலகர் சூழ்பூத கெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவாகுத் தேவரே. (4)

தொழுது கொண்டாடியே போற்றுநற் புலவர்புகழ் துகளற்ற சிவபாதராற் றேன்றுதிரு

ஞானசம் பந்தருக்கருள்செய்த தூய்மைகொ ளிருக்குவேதப், பழுதற்ற தேவார மாஞான பாவோதி பாசவினை யேறுமலே பரமனடி யார் பிறவி தீர்க்கின்ற செல்வர்க்கு பாற்கடலி னமு தமனையா, யுழுவையின் றோலுடுத் திக்கரியி னுரிபோர்வை யுடையராய் மேருதனுவா யும் பர்க ளொலாமிரத மாகவதன் மீதேறி யுயர்புர மெரித்துநகைசெய், விழுமியோர் தந்தநற் பூத பரி கெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவா குத் தேவரே. (5)

துதிபரவு மோங்கார வக்கரப் பொருளி னைச் சொல்லுவா யென்றுவினவத் தோன்றும லேபிரமன் சிவசுப்பிர மணியர்நற் றுணையடி வணங்காமலே, பதிவிரத நங்கைமுன் னவி சாரி மங்கைபோற் பங்கேரு கன்விழிக்கப் பன் னிருகை யுடையவன் சிரசினிற் குட்டியே பாத த்தி னுலுதைத்துச், சதுர்முகனை மாவிலங் கிட் டுசிறை வையெனச் சாற்றியே சாமிதானுந் தா ரணி தனிமுதல் யாவுஞ் சிருஷ்டித்த சண்முகக் கோவிலேஞராய், விதிதுதித் தடிபணிய வருளி ரத பூதபரி விருதுகொடி ஜெயகண்டியும் வீ ராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவாகுத் தேவரே. (6)

பரிகோடி கரிகோடி ரதவீரர் கள்கோடி பாரி டம் பேய்கள்கோடி பச்சைமணி யணிபூதர் கோ டானு கோடிநற் பரிவீரர் கோடிகோடி, தெரி வையர்க ளொருகோடி புடைசூழ சிற்சத்தி தேவியாம் பூரணையுடன் சீர்பெற்ற புட்கலை

மணாளனாய் வருகின்ற தேவர்க்கு முதன்மை யான, கரிமுகக் கடவுளுக் கனுஜனாய் மஞ்ஞை யூர் கந்தனுக் கிளையகோவே கதிரவனை யனை யவொளி திகழ்கின்ற வாள்வலது கைதனில் வைத்தவீரா, விரியுமன முடையவர்க் கருள் பூக கெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவா குத் தேவரே. (7)

தளிரனைய திருமேனி திகழுமர கதவல்லி தாட்சிலம் பணியின் மணிகள் சங்கரர்க் கஞ்சி யே யோடிடக் கழல்மோதித் தாக்குண்டு சிதறி பெங்கும், ஒளிவுபெற நவரத்ன மொல்லொன்று கௌரியுரு வுதயமாய்த் தோன்றுமதனை யுமா பதி யழைத்திடப் பெண்களுரு நவமாகி யோங் குநல் விமலனருளாற், குளிர்கனிக ளீன்றநவ வீரரொடு லட்சராய்க் குதிகொண்ட குணமே ருவே கொடியமிடி தீரநிதி யுதவுவாய் வள் ளலே குறைவற்ற கொடையாளனே, விளியாத புகழுள்ள பூதபுரி கெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும் வீராதி வீரர்புடை சூழதி பரா க்கிரம வீரவாகுத் தேவரே. (8)

திரைமருவி வருபெருங் கடலனைய பிறவி நோய் சிக்கிமும் மலமெய்தியே தெரிவையர் கள் மையலிற் சிக்கிவீண் காலமாய்த் திரிகை யென வேசுழன்று, நரைமருவி கண்குருடு செவி டுமை செவியதாய் நாணியுடல் கூனிமேனி நடு ங்கிட வயோதிக மடைந்திடும் பொழுதினில் நற்பற்கள் தானுநழுக, வரைமருவு நல்வீடு கழ னிகளிலையென்று மக்களுந் தானிகழவே வாழ்

வினை நம்பியே நின்றனைத் துதியாத மனிதருக்
கேயருளுவாய், விரைமருவு மலரணிகள் பூத
பரி கெஜவிரத விருதுகொடி ஜெயகண்டியும்
விராதி வீரர்புடை சூழதி பராக்கிரம வீரவா
குத் தேவரே. (9)

சரிதையி லுழன்றுசிவ பூசைபுரி கிரியை
யிற் சார்ந்தநற் பேரின்பமே தருகின்ற யோக
நிலை யறிகிலே னெனதுட னிற்றிகழு முயிரு
முடைமை, கருதுவ தனைத்துநின் சன்னதியி லீ
ந்தனன் கழலிணையை நம்புமடியேன் களித்த
னடியருக் கமுதுதவ நிதியருள்செய் கருணா
கராநிராசை, தரிநிழும் மலமொழிய குமரனடி
போற்றவே தக்கவர வேண்டுமின்னுந் தமிய
னின் னடியர்பாற் பணிபுரிய வேண்டுவது தந்
தருள்செய் கொடையாளனே, விரியுநன் மாலை
யணி பூதபரி கெஜவிரத விருதுகொடி ஜெய
கண்டியும் விராதி வீரர்புடை சூழதி பராக்கி
ரம வீரவாகுத் தேவரே. (10)

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# நவவீரர்கள் பதிகம்.

விருத்தம்.

கண்ணனயனிந்திரன் முதற்றேவர்சூரனாற் கைலைக்குவஞ்சியோடிக் கைலையிற்கண்டுசிவன் முன்னின்றுமுறையிடக் கண்டுசிவனெற்றிவிழியில், அனல்கண்டவப்பொறிகள் மூவிரெண்டுதவவே யப்பொறிசுடற்பயந்து வமரருந்தேவியுமோடவிற்பதியோட வப்பொழுதுகைலைநாதன், வண்ணவாயக்கினிப் பகவராற்பொறிகளை மருவுமலைசரவணத்தில் வப்புக்குமுகமாறு மீராறுகைகளு மாகப்பிறந்துவளரும், சின்னவற்புயமுருகர்க் கிளையநவவீரர்தந் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனாபதித்தலைவரே. (1)

கூறுசரவணமதனி லிட்டசுடராறுமுக குழவியாய்த்தோன்றவயன்மால் குலவுபலதேவருங் கண்டுவந்தேதொழுது குறுகியேகார்த்திகையினர், ஆறுபேர்தம்மையு மழைத்திந்தமுருகருக் கமுதூட்டுவீரென்னலும் அப்பெண்கள்முருகரைப் போற்றவேயுருவமா யாகிவந்தவர்மடியின்மே, லேறிவிளையமுதுண்டு பின்கடப்பந்தரி யியற்பால்வளர்ந்தமகவா யிசைந்தேகிடந்துந் தவழ்ந்தேநடந்து மெழுந்தோடிநீராடியுஞ், சீறிவிளையாடுமுருகருக்கிளையநவவீரர் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனாபதித்தலைவரே. (2)

சுந்தரியெழுந்தோட நின்றுசரவணமதனிற்

சுடராறுவாறுமுகமாய்த் தோன்றியவதரித்திட
வீசர்பால்மேவுமுன் றோகையோடிச்சிலம்பில்,
சிந்துநவமணிசிதற வரன்முன்கிடப்பவுமை திரு
வுருவமணிகடோறுந் தெரியவவ்வுருவங்கள் தே
சிகன்கண்டுநீ தெளியநீர்வருவீரென, சந்தமறை
வந்தருள தாள்பணிந்தீசர்மேற் றுமயற்குலவ
க்கணந் தையலர்கள்கெர்ப்பமுறை வம்மினுற்
கெர்ப்பங்க டன்னில்வந்தவதரிக்க, சிந்துவுடல்நீ
ண்டுவளர் வந்தநவவீரருந் திருமறையில்வந்தபெ
ரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீ
ரர் சேனுபதித்தலைவரே. (3)

அம்மன்னிருச்சிலம் பதனில்நவமணிகிடந்
தவதரித்திடுமாய்கையா லந்தநவசக்திகளும் நவ
ரத்னநிறமாக மாய்கையால்நவவீரருங், கும்ப
முலையன்னையுங் குன்றிநிறமும்பெரிய கோகன
கமணிமாலையுங் கூறுமின்வீசையுந் தாடியும்வி
ளங்கவே குலகிரியனைச்சொரூப, மிம்மெனவு
தித்தரு ளருள்பெற்றுவீரர்வா ளீய்ந்துமதிவே
ல்முருகனுக் கிம்புத்திதம்பியர்கள் நீயிட்டபணி
யெலா மின்செய்துவாழ்வீரென, செம்மையா
யருள்பெற்ற வோமென்றநவவீரர் திருமறையி
ல்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்
றுவாழ்வீரர் சேனுபதித்தலைவரே. (4)

சத்திமாணிக்கமும் முத்துநற்சத்தியுஞ் சரி
புஷ்பராகசத்தி சத்திகோமேதகம் சத்திவயி
ரச்சத்தி சரிபச்சைவைடூரியம், உத்தபவளச்ச
த்தி துய்யநீலச்சத்தி யுந்திவழிவீரவாகு உயர்
வீரகேசரி தவவீரகேந்திர ரெடுவீரமாகேஸ்
வரன், கத்தனுவீரப் புராந்தரன்வீராக் கதன்

வீரமார்த்தாண்டனுங் கருதரியவீராந்த கன்வி ரதிரனுங் கண்ணுதற்பரமனருளால், சித்தமகி ழ்வாகப் பிறந்தநவவீரர்தந் திருமறையில்வந்த பெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ் வீரர் சேனபதித்தலைவரே. (5)

விளையாடுமுருகரைப் பார்த்தழைத்தேசிவ ன் வேலாயுதங்கொடுத்து வீரசூரரையழைத் த சுரரைவதைக்கவே விடைதந்துகந்தனுக்கு, இள யநவவீரரும் லெட்சங்குமாரரு மெழுபூதர்படை சேனையு மிசைபெறுபடைத்துணைவ ராகவுங்கை க்கோள ரீசனூர்கைக்கொடுக்க, வளையுண்டமா யவன் மருகன்முருகேசனும் மன்றுங்கைக்கொ ள்முறைமையா யாதியில்கைக்கொள்வ மென்று பேர்பெற்றிடும் வழியொருக்காலுநெஞ்சத், தி ளையாதநவவீரர் லெட்சங்குமாரருந் திருமறை யில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெ ற்றுவாழ்வீரர் சேனபதித்தலைவரே. (6)

அரன்விடைகொடுப்பனற் பூதப்படைத்தலை வ ரைம்பத்துநான்குலெட்ச மாயிரமிரண்டா யிர ம்பூதவெள்ளங்க ளனைவரும்நடந்துசூழ, புரவரி யதேர்மீதில் சென்றுசிவமாயா புரிக்கோட்டை யைச்சூழ்ந்துமே புரிதாருகாசூரன் கிரவுஞ்சகி ரியையும் பொடியாக்கியேஜெயித்தோம், மருவு மசுரர்சேனை யொருகோடிவெள்ளமும் மடிய வேகணைதூவியோர் மயிலாகவேசென்று மேவி திருசெந்தில்மா னகரதனில்சூழ்ந்திருக்கும், சிவ சுப்பிரமணியருக் கிளயநவவீரருந் திருமறையி ல்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெ ற்றுவாழ்வீரர் சேனபதித்தலைவரே. (7)

மன்னுசெந்தியிலிருந் தறுமுகன்றாதனுன் மயேந்திரபுரிக்கெய்தியே மாசூரனைக்கண்டு வேலன்விடுதூதனுன் வானவர்கள்சிறைவிடாயோ, யுன்னையிருவாகப் பிளப்பனவவேலவ னுன்னிலு ஞ்சூரபத்ம னேதுமெய்த்தூதனைக் கட்டடாவெ ன்னவே யோடிவச்சிரவாகுவுந், துன்னனந்தங் கோடி சேனைகள்சூழவே தூரத்தியேசங்கரித் துத் துய்யபட்டணமெலா மழித்துவரவேவந்த சூரனுடசேதியெல்லாந், தென்னிலகுமுருகருக் கிளயநவவீரருந் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனபதித்தலைவரே. (8)

வீரவாகுத்தூது போய்வந்துகுகனுக்கு விண்ணப்பமதுசெய்யவே வேலைக்கடந்தாண்டியே மகூடந்தனில் வெற்றுணைவரோடிருந்தே, வாரமாய்த்தம்பிய ரொடுபூதசேனையும் மயேந்திரபுரிக்கெய்தியே வாள்சூரர்மைந்தர்மூ வாயிரத்தொருநால்வர் மந்திரிகள்மூவாயிரம், பேரவர்கள்மைந்தனு ருயிரவர்சேனைகள் பெருக்கமெல்லாமழித்தோய் பின்னையுமெதிரில்வந் தெதிர்த்திடுஞ் சூரர்தன் புஜபலபராக்கிரமெலாஞ், சேரச்செயித்தவர் வீரவாகுத்தலைவர் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனபதித்தலைவரே. (9)

சேடிரதமேரியே வஜ்ராயுதங்கொண்டு சிங்கமுகசூரனுடலைச் செப்புமொருகோடிவெள் ளஞ்சேனையுங்கொன்று சென்றுநாற்பதினுயிரங் கோடிவெள்ளஞ்சேனை யொடுசூரபத்மனைக் குறுகியேசமர்செய்யவே கொள்ளவெஞ்சேனையெல்

லாங்கொன்றுசூரன்மேல் கூர்வேலெடுத்தெரிந்தோய், வாடுமுடலைப்பிளந் தெரியவேவப்பிளவு மயிலொன்றுகோழியொன்றாய் வந்துயுத்தஞ்செய்ய கோழியைக்கொடியாக்கி மயிலைவாகனமாக்கினோய், தேடரியமுருகருக் கிளையநவவீரருந் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனாபதித்தலைவரே. (10)

ஜெயசூரசங்கார மானபின்வானவர்கள் சிறைகளையெலாம்விடுத்துத் திருப்பரங்குன்றத்தில் வந்துதெய்வானையைத் திருமணஞ்செய்தருளியே, இயறெய்வலோகமுழு துங்கொடியேத்தியே யிந்திரப்பட்டந்தரித்து இயலானமங்கிலியமழியாதபிச்சையிட் டிப்புவியில்வந்தருளியே, வயமானவள்ளியை மணந்துநற்சிவிகைசூழ் மாபெருங்கைலைமேவ வனமாதுபார்வதி மணாளனையணிந்தருள்செய் மகிழ்வாகவீற்றிருக்கும், சிவ சுப்பிரமணியருக் கிளையநவவீரருந் திருமறையில்வந்தபெரியோர் சிவசிவமகாதேவ ரருள்பெற்றுவாழ்வீரர் சேனாபதித்தலைவரே. (11)

முற்றிற்று.

குறிப்பு.


இப்புத்தகம் வேண்டுவோர் திருவாதி மேலவீதி அழகா விலாஸ் அச்சுக்கூடத்திலும், கும்பகோணம் தாலூகா சுவாமிமலை கீழச்சன்னதி வீதி வீரசைவாள் சு. பஞ்சநத ஐயரிடத்திலும் விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| இதன் விலை | அணா 1. |
| கிளேஸ் தாளில் அச்சிட்டது | ,, 2. |

# லண்டன் வாட்சு அண்டு கோ,

திருவாதி, தஞ்சாவூர் ஜில்லா.

இதை ஒவ்வொருவரும் கவனியுங்கள்.



தக்க லாபம். எங்களுடை
உண்மையை ஒரே தடவை ப
சோதித்துப் பாருங்கள்; அ
போது நீங்கள் ஆச்சரியப்ப
வீர்கள்.

வரவழைத்து திருப்தி இ
லாவிட்டால் உடனே ரூபாை
வாபீஸ் செய்துவிடுகிறோம்.

விவரம்.

புதிய பாக்கெட் லீவர்வாட்
5 வருஷம் உத்தரவாதமும்
த்தர அளவுமுள்ளது. இந்தி
கவர்ண்மெண்டு குண்டுக்குச்
யான காலத்தைக் காட்
கூடியது.

| | | | |
|---|---|---|---|
| 1. | புதிய பாக்கெட் லீவர் வாட்சு | ரூ | 5-4 |
| 2. | ஷை மாதிரி கையில் கட்டிக்கொள்ளக்கூடியது சிலண்டர். | ,, | 6-4 |
| 3. | ஷை அசல் சொக்கவெள்ளி | ,, | 8-4 |
| 4. | ஷை மாதிரி நிக்கல் ரேடியம், டயலும் 8 மூலைகளுமுள்ளது. | ,, | 10-0 |

இதைத்தவிர ஓமிகா, மிரிடியன், கெடியாரங்கள் விலை ச
மாயும் வேண்டியவர்கள் அரை அணா ஸ்டாம்பு அனுப்பி கி
ஜாப்தாவும் பெற்றுக்கொள்ளலாம்.

LONDON WATCH & Co.
Tiruvadi, Tanjore District.


## குறிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் திருவாதி மேலவீ
அழகர் விலாஸ அச்சுக்கூடத்திலும், கும்பகோண
தாலுக்கா சுவாமிமலை கீழச்சன்னதி வீதி வீரசைவ
சு. பஞ்சநத ஐயரிடத்திலும் விலைகொடுத்துப் பெற்
க்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| இதன் விலை | அணா | 1. |
| கிளேஸ் தாளில் அச்சிட்டது | ,, | 2. |